பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

02 10 2023 MONDAY 7.15 PM

ஆகாஷவாணி
தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று, ராஜஸ்தான் மாநிலத்தில் 7 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை தொடங்கிவைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.
- பீகார் மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட சாதிவாரி கணக்கெடுப்பு விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.
- தமிழகத்தில் முதுநிலை பொறியியல் மாணவர்களை விஞ்ஞானிகளாக ஊக்குவிக்கும் திட்டத்தில் ஆண்டு தோறும் 9 பேருக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- கோவிட் தடுப்பூசிக்கான mRNA மரபணு தொழில்நுட்பத்தை கண்டுபிடித்த மருத்துவ நிபுணர்கள் Katalin Kariko, Drew Weissman ஆகியோருக்கு இவ்வாண்டுக்கான நோபல் பரிசு பகிர்ந்தளிக்கப்படுகிறது.
- ஆசிய விளையாட்டுப்போட்டியில் இந்தியா இன்று 3 வெள்ளி, 4 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

-- *இனி விரிவான செய்திகள்* ----

<<<<<<<>>>>>

நாட்டில் பின்தங்கிய பகுதிகளின் வளர்ச்சிக்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளர்.

ராஜஸ்தான் மாநிலம் Chittorgarh-ல் இன்று சுமார் 7 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை தொடங்கிவைத்தும், அடிக்கல் நாட்டியும் பேசிய பிரதமர், ஒவ்வொரு மாவட்டத்தையும் மேம்படுத்தும் நோக்கில், முன்னோடி மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு, வளர்ச்சிப்பணிகளுக்கு முழுகவனம் செலுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

ராஜஸ்தான் மாநிலத்திலும் இத்திட்டத்தின்கீழ் பல மாவட்டங்கள் மேம்படுத்தப்பட்டு வருவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இத்திட்டத்தின் அடுத்தக்கட்டமாக ஒவ்வொரு தாலுக்காக்களுக்கும் சிறப்பு கவனம் செலுத்திடும் வகையில், முன்னோடி தாலுக்காக்கள் திட்டத்தையும் அரசு கொண்டுவந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த வளர்ச்சித் திட்டங்களுக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் வகையில், ஊரகப்பகுதிகளை மேம்படுத்த துடிப்பான கிராமங்கள் திட்டத்தையும் அரசு செயல்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

ராஜஸ்தான் மாநிலத்தில் 4 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பில் Mehsana - Gurdaspur எரிவாயு குழாய் திட்டத்தையும், ரயில்வே திட்டங்களையும் சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களையும் பிரதமர் இன்று நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

Chittorgarh –ல் உள்ள Sanwariya Seth ஆலயத்திற்கு சென்று பிரதமர் திரு நரேந்திர மோடி வழிபட்டார்.

<<<<<<<>>>>>

தூய்மை இந்தியா கிராப்புற இயக்கத்தின்கீழ் ஜம்மு காஷ்மீரில் 100 சதவீத கிராமங்கள் பொது கழிப்பிட வசதி பெற்றிருப்பதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வெளியிட்ட சமூக வலைதள பதிவுக்கு பதிலளித்துள்ள பிரதமர், ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளித்து வந்த அரசியலமைப்புச்சட்டத்தின் 370-ஆவது பிரிவு நீக்கப்பட்ட பிறகு, வளர்ச்சிப்பணிகள் விரைவாக நடைபெற்று புதிய உச்சத்தை எட்டியிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அரசின் வளர்ச்சித் திட்டங்கள் தற்போது எவ்வித தடையும் இன்றி நேரடியாக ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் செயல்படுத்தப்பட்டு வருவதையும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

<<<<<<<>>>>>

பீகார் மாநிலத்தில் இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட சாதிவாரி கணக்கெடுப்பு விவரங்களை அம்மாநில அரசு வெளியிட்டுள்ளது.

101 பக்கங்கள் கொண்ட சாதிவாரி கணக்கெடுப்பு அறிக்கையை அம்மாநில தலைமைச்செயலர் திரு விவேக் குமார் சிங் வெளியிட்டார்.

13 கோடி மக்கள் தொகை கொண்ட பீகார் மாநிலத்தில் மிகவும் பின்தங்கிய வகுப்பினர் 36 புள்ளி பூஜ்யம் ஒன்று சதவீதம் இருப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 27 புள்ளி ஒன்று இரண்டு சதவீதமும், ஷெல்யூல்டு வகுப்பினர் 19 புள்ளி ஆறு ஐந்து சதவீதமும் இருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுப்பிரிவினர் பட்டியலில் 15 புள்ளி ஐந்து இரண்டு சதவீதத்தினர் உள்ளனர்.

பீகார் மாநிலத்தில் பழங்குடியின மக்கள் ஒன்று புள்ளி ஆறு எட்டு சதவீதம் மட்டுமே இருப்பதாகவும் சாதிவாரி கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

<<<<<<<>>>>>

தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் அரசு அலுவலகங்களில் ஒருமாத கால சிறப்பு தூய்மை இயக்கத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய அரசு பணியாளர் அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அரசு அலுவலகங்களில் கடந்த இரண்டு முறை மேற்கொள்ளப்பட்ட சிறப்பு தூய்மை இயக்கத்தில் 90 லட்சம் சதுர அடி பரப்பளவு தூய்மைப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேவையற்ற பொருட்களை விற்பனை செய்ததில் அரசுக்கு 370 கோடி ரூபாய் வருவாய் கிடைத்ததாகவும், பொதுமக்களின் நான்கு லட்சத்து 56 ஆயிரம் முதலீடுகளுக்கு தீர்வுகாணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

சென்னை – யாழ்பாணம் இடையே கடந்த டிசம்பர் மாதம் விமான போக்குவரத்து தொடங்கப்பட்டதிலிருந்து தற்போது வரை 200 விமான சேவை நிறைவுசெய்யப்பட்டுள்ளது.

பயணிகள் தேவைக்கேற்ப கூடுதலான விமானங்களை விமான சேவை நிறுவனம் இயக்கியுள்ளது.

இதுதொடர்பாக, யாழ்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், சென்னை – யாழ்பாணம் இடையே விமான போக்குவரத்து சேவை தொடங்கப்பட்டதால் இருநாடுகளுக்கும் இடையிலான போக்குவரத்து தொடர்பு மேம்படுத்தப்பட்டு, பொருளாதார வளர்ச்சிக்கு உதவியுள்ளதாக தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்ட பரிசுப்பொருட்கள் மின்னணு ஏலத்தில் விடப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

இம்மாதம் 31-ஆம் தேதிவரை இந்த ஏலத்தில் பங்கேற்கலாம்.

இதிலிருந்து கிடைக்கும் தொகை கங்கை நதி தூய்மைப்பணிகளுக்கு பயன்படுத்தப்பட உள்ளது.

100 ரூபாய் முதல், 65 லட்சம் ரூபாய் வரையிலான பொருட்கள் இந்த மின்னணு ஏலத்தில் விடப்படுகின்றன.

<<<<<<<>>>>>

தமிழகத்தில், முதுநிலை பொறியியல் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களை இளம் விஞ்ஞானிகளாக உருவாக்கிடும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஒன்பது மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் 10 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட உள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று மாநில அரசு சார்பில் சாதனை படைத்த தமிழக விஞ்ஞானிகளுக்கான பாராட்டு விழாவில் பேசிய முதலமைச்சர் இதனை தெரிவித்தார்.

சாதனை படைத்த விஞ்ஞானிகள் திரு வீரமுத்துவேல், திருமதி நிஹார் ஷாஜி, திரு கே சிவன், திரு மயில்சாமி அண்ணாதுரை, திரு எம் சங்கரன், திரு ஏ ராஜராஜன், திரு நாராயணன், திரு ஆசிர் பாக்கியராஜ், திருமதி மு. வனிதா ஆகியோரை பாராட்டி அவர்களுக்கு தலா 25 லட்சம் ரூபாய் ரொக்கப்பரிசையும் முதலமைச்சர் வழங்கினார்.

<<<<<<<>>>>>

கோவிட் தடுப்பூசிக்கான mRNA மரபணு தொழில்நுட்பத்தை கண்டுபிடித்த மருத்துவ நிபுணர்கள் Katalin Kariko, Drew Weissman ஆகியோருக்கு இவ்வாண்டுக்கான நோபல் பரிசு பகிர்ந்தளிக்கப்படுகிறது

அமெரிக்காவின் ஸ்டாக்ஹோமில் நோபல் பரிசு குழுவினர் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், கோவிட் தொற்று ஏற்படுவதற்கு முன்பே, பரிட்சாத்த அடிப்படையில் கொண்டுவரப்பட்ட இந்த தடுப்பூசி, பல கோடிக்கணக்கான மக்களின் உயிரை காப்பாற்றியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புற்றுநோய் உள்ளிட்டவற்றுக்கும் தடுப்பாக இது அமைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உடலில் உள்ள ஒவ்வொரு செல்லிலும், புரதப்பொருளை ஊக்குவிக்கும் பணி mRNA தொழில்நுட்பத்தின் மூலம் செய்ய முடியும் என்று இந்த மருத்துவ விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

<<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய விளையாட்டுப்போட்டியில் இந்தியா இன்று 3 வெள்ளி, 4 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

சீனாவின் Hangzhou-வில் நடைபெறும் போட்டியில், மகளிர் நீளம் தாண்டுதலில் Ancy Sojan 6 புள்ளி ஐந்து ஆறு மீட்டர் நீளம் தாண்டி வெள்ளிப்பதக்கம் வென்றார்.

400 மீட்டர் கலப்பு தொடர் ஓட்டத்தில் இந்திய வீரர்கள் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

இப்போட்டியில், இலங்கை அணி தகுதிநீக்கம் செய்யப்பட்டதன்மூலம் இந்தியாவுக்கு இப்பதக்கம் கிடைத்தது.

மகளிர் 3 ஆயிரம் மீட்டர் தடை தாண்டுதல் பிரிவில் பருல் சௌத்ரி வெள்ளிப்பதக்கமும், பிரித்தி வெண்கலப்பதக்கமும் வென்றுள்ளனர்.

Speed ஸ்கேட்டிங் 3 ஆயிரம் மீட்டர் தொடர் ஓட்டப்பிரிவில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணிகள் வெண்கலப் பதக்கம் வென்றன.

முதல்முறையாக ஸ்கேட்டிங் பிரிவில் இந்திய அணி பதக்கம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது

இந்தியாவின் Heeral Sadhu, Karthika Jagadeeswaran மற்றும் ஆர்த்தி கஸ்தூரிராஜ் ஆகியோர் வெண்கலப் பதக்கம் வென்றனர்.

இந்திய ஆடவர் அணியில் Aryan Pal, Anand Kumar, Siddhant மற்றும் விக்ரம் ஆகியோர் கொண்ட அணி வெண்கலப்பதக்கம் வென்றனர்.

டேபிள் டென்னிஸ் போட்டியில் மகளிர் இரட்டையர் பிரிவில், Ahyika - 'Sutirtha Mukherjee இணை வெண்கலப்பதக்கம் வென்றது.

பதக்கம் வென்ற இந்திய அணிக்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி, மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர் ஆகியோர் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

பிரதமர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், அர்ப்பணிப்புடன் செயல்பட்ட இந்திய அணிக்கு தமது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்வதாகவும், அவர்களது ஊக்கமும், உத்வேகமும் விளையாட்டு வீரர்களுக்கு உதாரணமாக திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்போட்டியின் பேட்மிண்டன் கலப்பு இரட்டையர் பிரவில் இந்தியாவின் கிருஷ்ணபிரசாத் - தனிஷா கிறாஸ்டோ இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் 400 மீட்டர் தடை தாண்டும் ஓட்டத்தில் வித்யா ராமராஜ் இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் 400 மீட்டர் தடை தாண்டும் ஓட்டத்தில் சந்தோஷ் குமார் ‘Yashas Palaksha ஆகியோர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்

ஆடவர் உயரம் தாண்டுதலில் ‘Jesse Sandesh, Sarvesh Anil ஆகியோர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் 800 மீட்டர் உயரம் தாண்டுதலில் ‘Mohammad Afsal, Krishan Kumar இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா இதுவரை 13 தங்கம், 24 வெள்ளி, 23 வெண்கலப்பதக்கம் என மொத்தம் 60 பதக்கங்களை வென்று பதக்கபட்டியலில் நான்காவது இடத்தில் உள்ளது.

**<<<<<END>>>>>**